உ

சிவமயம்



யாழ்ப்பாணம் — வண்ணார்பண்ணை கிழக்கு

கலட்டி — எச்சாட்டி

**ஸ்ரீ மகமாரி அம்பாள்**

# திருவூஞ்சல்

**06.08.1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் — வண்ணார்பண்ணை கிழக்கு

கலட்டி — எச்சாட்டி

# ஸ்ரீ மகமாரி அம்பாள்மீது

வித்துவ சிரோமணி ந. சுப்பையபிள்ளை அவர்கள்

பாடிய

# திருவூஞ்சல்

**06 . 08 . 1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு — கலட்டிநகர்

# எச்சாட்டி ஸ்ரீ மகமாரியம்மை

# திருவூஞ்சல்

வெண்பா

சீர்பூத்த வண்கலட்டி எச்சாட்டி மாரியின்மேல்
பேர்பூத்த பாமாலை சூட்டிடவே — யேர்பூத்த
பார்வதியாள் பங்கனருள் பொங்கும் கருணையெனுங்
கார்பூத்த கரிமுகவன் காப்பு.

இராகம்: நாட்டை

பொன்பூத்த பரவொளியா யேக னாகிப்
புகழ்பூத்த வனாதிமுத்த பதியாய் நின்ற
தென்பூத்த பரசிவனார் சக்தி யாகித்
திகழ்வண்ணைக் கலட்டியெனும் நகரில் வாழும்
இன்பூத்த மகமாரி யம்மை மீதே
எழில்பூத்த வூஞ்சலிசை யினிது பாட
மன்பூத்த பிரணவத்தின் பொருளா யோங்கும்
மறைபூத்த கணபதிதாள் வணங்கு வாமே. 1

இராகம்: ஆனந்தபைரவி

நலனோங்கு நால்வாக்குங் கால்க ளாக
நயனோங்கு நாதவிந்து விட்ட மாகப்
பலனோங்கு வர்ணவின மிழைய தாகப்
பரமோங்கு மாகமங்கள் கயிற தாகப்
புலனோங்கு மந்திரங்கள் பலகை யாகப்
புகழோங்கு பிரணவமே பீடமாக
வலனோங்கு வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவளருஞ் செம்பவளக் கால்க ணாட்டிச்
சீர்வளரு மரகதநல் விட்ட மூட்டிக்
குருவளரும் பசுங்கனகக் கயிறு பூட்டிக்
குணம்வளரும் வச்சிரத்துப் பலகை மாட்டி
உருவளரு மயனுயர்செம் மணிக ளீட்டி
ஒளிவளரும் வகையமைத்த வூஞ்சன் மீதே
மருவளரும் வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 3

இராகம் : காபி

பூமேவு மயன்வேத நாத மூட்டப்
பொலன்மேவு நாரணனார் தீபங் காட்ட
நாமேவுங் கலைமகள்பல் லாண்டு நாட்ட
நலமேவுங் கமலமலர் மாரி நீட்ட
மீமேவும் விஞ்சையர்கள் கான மீட்ட
விண்மேவு மரமகளிர் வடந்தொட் டாட்ட
மாமேவும் வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 4

இராகம் : கரகரப்பிரியா

சேண்பொலியு மதிபருதி கவிகை தாங்கத்
திறம்பொலியுஞ் சதாகதிசா மரைகை வாங்க
ஏண்பொலியும் விபுதர்வட்டம் வீசித் தேங்க
இயல்பொலியும் பூமழைவிண் ணின்று தூங்கப்
பூண்பொலிய திருமுதலோர் மகிழ்ச்சி வீங்கப்
புடைபொலியு மடியரிரு வினைகள் நீங்க
மாண்பொலியும் வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : தந்நியாசி

மேல்விளங்குங் கந்தருவர் சுருதி கூட்ட
வியன்விளங்கு மிந்திரனார் தாளம் போட
பால்விளங்குந் தும்புருநா ரதர்பண் பாடப்
பயன்விளங்கு பல்லியநல் லொலி விண்மூட
நால்விளங்கு மிடைமடைவார் நடன மாட
நுவல்விளங்குந் தமிழ்வேத வோசை நீட
மால்விளங்கு வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 6

இராகம் : ஆரபி

சொல்லியலுந் தூயவுள மன்பு கூரத்
துதியியலுந் நாக்கடிருப் புகழை நேர
வெல்லியலுங் கரங்கள்சிர மீது சேர
வெழிலியலு மானந்தக் கண்ணீர் வார
வல்லியலும் வெண்ணீற்றி னணிநன் கார
மிக்குயலும் பக்தர்குழாம் விரவிச் சார
மல்லியலும் வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 7

இராகம் : அடானா

பொன்னிலங்கு சிரமௌலி பொலிந்தே ஆடப்
பொற்பிலங்கு மிடையினம ராடை யாடத்
தென்னிலங்குங் கொங்கைமிசை மணிப்பூ ணாடத்
திறமிலங்கு செங்கைமிசை வளைக ளாட
மின்னிலங்குங் குழைவளர்தா டங்க மாட
மிசையிலங்குங் குழலிடைப் பூந்தொடை நின்றாட
மன்னிலங்கும் வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : பூபாளம்

சிரஞ்சிறந்த தொடையினரே யாடீ ரூஞ்சல்
சீர்சிறந்த விடையினரே யாடீ ரூஞ்சல்
பரஞ்சிறந்த மேன்மையரே யாடீ ரூஞ்சல்
பயஞ்சிறந்த பான்மையரே யாடீ ரூஞ்சல்
திரஞ்சிறந்த துய்யவரே யாடீ ரூஞ்சல்
சிவஞ்சிறந்த மெய்யவரே யாடீ ரூஞ்சல்
வரஞ்சிறந்த வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 9

இராகம் : பூபாளம்

விண்மருவுஞ் சோதியரே யாடீ ரூஞ்சல்
வியன்மருவு மோதியரே யாடீ ரூஞ்சல்
எண்மருவும் விபூதியரே யாடீ ரூஞ்சல்
இசைமருவு மனாதியரே யாடீ ரூஞ்சல்
பண்மருவு மொழியினரே யாடீ ரூஞ்சல்
படைமருவு விழியினரே யாடீ ரூஞ்சல்
மண்மருவும் வண்கலட்டி நகரில் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல். 10

இராகம் : மத்தியமாவதி

பூர்த்திபெறு திருவருளைந் தெழுத்தும் வாழி
புகழ்ச்சி பெறு விபூதியக்கு மணியும் வாழி
கீர்த்திபெறு நிகமமொடா கமங்கள் வாழி
கிளர்ச்சிபெறு மாதிசைவர் முதலோர் வாழி
மூர்த்திபெறு முளைத்தடியார் தொகுதி வாழி
முறைமைபெறு முகிலரசர் சுரபி வாழி
சீர்த்திபெறு வண்கலட்டி நகரம் வாழி
சிறந்தமக மாரியம்மை வாழி வாழி. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்மிகு மகமாரி அம்பாள் துதி

ஆக்கம் :

(''பறாளாய் விநாயகன்'' — ''நாயன்மார் – நாதன்''(

உலகத்து நாயகியே எங்கள் மகமாரி
உன்பாதம் சரணடைந்தோம் எங்கள் மகமாரி
வண்ணைப் பதிஉறைந்தாய் எங்கள் மகமாரி
வாழ்வுநலந் தந்திடம்மா எங்கள் மகமாரி
எச்சாட்டி நாயகியே எங்கள் மகமாரி
ஏக்கமெலாம் போக்கிடம்மா எங்கள் மகமாரி
சிந்தையில் உனைநினைந்தால் எங்கள் மகமாரி
தேனருவி பெருக்கெடுக்கும் எங்கள் மகமாரி
கலட்டிப் பதிதனிலே எங்கள் மகமாரி
கருணைமழை பொழிபவளே எங்கள் மகமாரி
கல்யாண சுந்தரியே எங்கள் மகமாரி
காத்தருள வந்திடம்மா எங்கள் மகமாரி
தில்லையிலே ஆடும்தேவி! எங்கள் மகமாரி
திருவருளைத் தாருமம்மா எங்கள் மகமாரி
உறறதுணை நீயென்று எங்கள் மகமாரி
ஓடிவந்தோம் ஏற்றிடம்மா எங்கள் மகமாரி
தீராநோய் தீர்ப்பாயம்மா எங்கள் மகமாரி
திருவருளைத் தாருமம்மா எங்கள் மகமாரி
திருநீறு ஐந்தெழுத்தும் எங்கள் மகமாரி
திக்கெட்டும் பரவவைப்பாய் எங்கள் மகமாரி
திருமுறைப் பண்வளர எங்கள் மகமாரி
திருவுளங் கொண்டிடம்மா எங்கள் மகமாரி
பத்திபண்ணிப் பாடிடவே எங்கள் மகமாரி
பக்திஉள்ளம் தரவேண்டும் எங்கள் மகமாரி
வேப்பமரச் சூழ்நிலையில் எங்கள் மகமாரி
வேண்டியன தந்திடுவாய் எங்கள் மகமாரி
கலட்டிப் பதியுறைவோய் எங்கள் மகமாரி
கருணையுடன் காத்திடம்மா எங்கள் மகமாரி
நாவலரும் பாவலரும் எங்கள் மகமாரி
நம்மிடையே வந்திடட்டும் எங்கள் மகமாரி
தில்லைநட னமதை எங்கள் மகமாரி
தெரிசனத்திற் காட்டிடம்மா எங்கள் மகமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதவரும் வாழவைப்பாள் எங்கள் மகமாரி
வண்ணைநகர்க் கண்மணியே எங்கள் மகமாரி
சந்தனநற் குங்குமத்தாய் எங்கள் மகமாரி
தந்தருள வந்தருள்வாய் எங்கள் மகமாரி
நல்லொழுக்கந் தந்திடுவாய் எங்கள் மகமாரி
ஞானநிலை தந்திடம்மா எங்கள் மகமாரி
எச்சாட்டி பதியுறைவாள் எங்கள் மகமாரி
எத்திக்கும் ஆள்பவளாம் எங்கள் மகமாரி
தேரேறி வந்திடுவாள் எங்கள் மகமாரி
திக்கெட்டும் காத்திடுவாள் எங்கள் மகமாரி
உலகத்து நாயகியே எங்கள் மகமாரி
உண்பாதம் சரணமம்மா! எங்கள் மகமாரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு

சௌந்தரம் பதிப்பகம்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org